## சார்பு நீதிமன்றம், அவிநாசி

## OS – 444/2016

நாள் 22.10.2025

DW1 – ராமாத்தாள்

த/பெ – ராமசாமி கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd day of October 2025)**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. நான் படிக்கவில்லை. அங்காத்தாள், சுப்புலட்சுமி, சண்முகசுந்தரம் (எ) சுந்தரசாமி ஆகியோர் எனது உடன் பிறந்த சகோதர, சகோதரிகள் என்றால் சரிதான். எனது அப்பா ராமசாமி கவுண்டர் 1990–ம் ஆண்டு இறந்து போய்விட்டார் என்றால் சரிதான். எனது தாத்தா பழனிச்சாமி கவுண்டரும் 1960–ம் ஆண்டுவாக்கிலேயே இறந்து போய்விட்டார் என்றால் சரிதான். இந்த பாக வழக்கை எனது தம்பி சுந்தரசாமியின் மகன் மற்றும் மனைவி ஆகியோர் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்யும் போது எனது அம்மா செல்லம்மாள் உயிரோடு தான் இருந்தார். இந்த வழக்கு மத்தியில் எனது அம்மா இறந்து போய்விட்டார். தாவா சொத்துக்கள் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். அவ்வாறு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்தை தான் எனது தாத்தா பழனிச்சாமி கவுண்டரும், அவரது சகோதரர் கருப்ப கவுண்டரும்19.07.1940–ம் தேதியிட்ட பதிவு பாகப்பிரிவினை பத்திரம் பி.வா.சா.ஆ.2 மூலம் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினையில் எனது தாத்தா பழனிச்சாமி கவுண்டருக்கு வந்த சொத்தைப் பொறுத்து எந்தவொரு ஆவணமும் ஏற்படுத்தாமலேயே இறந்து போய்விட்டார் என்றால் சரிதான். அதற்கு பின்பு

எனது அப்பா ராமாசாமி கவுண்டரும், எனது தம்பி 1–ம் பிரதிவாதியும், எனது அம்மா 2–ம் பிரதிவாதி செல்லம்மாளும் கடந்த 05.12.1984–ம் தேதியில் பதிவு பாகப்பிரிவினை பத்திரம் பி.வா.சா.ஆ.3–ஐ ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினையில் A–அட்டவணை சொத்தாக 17.76 ஏக்கர் சொத்து எனது அப்பா ராமசாமி கவுண்டருக்கும், B–அட்டவணை சொத்தாக 3.75 ஏக்கர் எனது தாயார் 2–ம் பிரதிவாதிக்கு ஆயுள் பாத்திய உரிமையும் கொடுத்து, அவரது ஆயுளுக்கு பிறகு அந்த சொத்து எனது தம்பி 1–ம் பிரதிவாதி அடைய வேண்டியது என்றும், C–அட்டவணை சொத்தாக 22.95 ஏக்கர் சொத்து 1–ம் பிரதிவாதிக்கும் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

2. அதில் 1–ம் பிரதிவாதிக்கு பாகமாக வந்த C – அட்டவணை சொத்தான 22.95 ஏக்கரில் 3.75 ஏக்கர் சொத்தை ஒரு ராமசாமி கவுண்டருக்கு 1–ம் பிரதிவாதியும், மைனராக இருந்த 1–ம் வாதியும் சேர்ந்து கிரையம் கொடுத்து விட்டார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி வீதம் ராமசாமி கவுண்டருக்கு 3.75 ஏக்கர் சொத்து விற்கப்பட்டது என்றும், அதில் 1–ம் வாதி தனசேகருக்கும் சொத்தில் பாத்தியம் இருந்ததால் தான் அவர் பெயரையும் சேர்த்து கிரையம் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. மேற்படி வீதம் விற்கப்பட்ட 3.75 ஏக்கர் தவிர்த்து பி.வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை பத்திரத்தில் கண்டுள்ள மீதமுள்ள சொத்துக்கள் முழுவதும் எங்கள் குடும்பத்தின் வசம் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். எனது தகப்பனார் ராமசாமி கவுண்டர் 1990–ம் ஆண்டில் இறப்பதற்கு முன்பாகவே 1989–ல் 1–ம் வாதி தனசேகர் பிறந்து விட்டார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 பாகப்பிரிவினையில் எனது அப்பா ராமசாமி கவுண்டருக்கு பாகமாக வந்த A–அட்டவணை

சொத்தைப் பொறுத்து 1,2–ம் பிரதிவாதிகள் மற்றும் மைனராக இருந்த 1–ம் வாதிக்காகவும் சேர்த்து 13.11.1996–ம் தேதியில் பதிவு பாகபாத்திய விடுதலை பத்திரத்தை எனக்கும், எனது சகோதரிகளான 4,6 பிரதிவாதிகளுக்கும் சேர்த்து எழுதி கொடுத்து விட்டார்கள் என்றால் சரிதான். அந்த சொத்துக்களில் 1–ம் வாதிக்கும் பாகபாத்திய உரிமை இருப்பதால் தான் 1–ம் வாதியையும் தரப்பினராக சேர்த்து அவரது கார்டியனான அப்பா 1–ம் பிரதிவாதி விடுதலை பத்திரத்தை எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் மைனராக இருந்த 1–ம் வாதிக்கு சட்டப்படி பாக பாத்திய உரிமை உள்ள நிலையில் அவருடைய உரிமையையும் சேர்த்து 1–ம் பிரதிவாதி எங்களுக்கு எழுதி கொடுத்த விடுதலை பத்திரம் 1–ம் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 1–ம் பிரதிவாதி அவருடைய மகனான 1–ம் வாதியின் நலனுக்காக வேண்டி ஆவணம் எழுதி கொடுத்திருந்தால் அதை கிரைய ஆவணமாக தான் எழுதி கொடுத்திருப்பார் என்றும், ஆனால் எந்தவொரு பிரதிபலனும் இல்லாமல் எங்கள் பெயருக்கு எழுதி கொடுத்துள்ள விடுதலை பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனால், பி.வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை பத்திரத்தில் ராமசாமி கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட A–அட்டவணை சொத்தில் மைனர் 1–ம் வாதிக்கு இருந்த சட்டப்படியான பொதுவில் 1/3 பங்கு சொத்தை பொறுத்து 1–ம் பிரதிவாதி எழுதி கொடுத்த விடுதலை பத்திரம் 1–ம் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

3. இந்த பாகப்பிரிவினை வழக்கானது 2016–ம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கு மத்தியில் எனது தம்பி 1–ம் பிரதிவாதி அவருக்கு பி.வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை பத்திரத்தில் பாகமாக வந்த C–அட்டவணை சொத்தான 22.95 ஏக்கரில் பொதுவில் 1/2 பங்கு

சொத்தை பொறுத்து எனக்கும், எனது சகோதரி 4–ம் பிரதிவாதிக்கும் 13.10.2016–ம் தேதியிட்ட பதிவு செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த பி.வா.சா.ஆ.5 அசல் செட்டில்மெண்ட் ஆவணத்தை பார்த்துள்ளேனா? என்றால் அதை நான் பார்க்கவில்லை. அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விபரமும் நான் படித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். ஆனால், செட்டில்மெண்ட் ஆவணம் எங்களுக்கு எழுதி வைத்தது உண்மை. அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் 1–ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்த சொத்தை தான் எங்களுக்கு எழுதி வைப்பதாக சொல்லி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் கண்ட சொத்து 1–ம் பிரதிவாதிக்கு சுயார்ஜிதமாய் பாத்தியப்பட்ட சொத்து என்று கண்டு எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்பட்ட காலத்தில் 1–ம் பிரதிவாதிக்கும், 1–ம் வாதிக்கும் இடையே சுமூகமான உறவு இல்லை என்றால் சரிதான். எங்கள் பெயருக்கு பி.வா.சா.ஆ.5 செட்டில்மெண்ட் ஆவணம் 1–ம் பிரதிவாதி எழுதி வைத்த விபரம் 1–ம் வாதி தனசேகருக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.5 மூலம் எழுதி வைத்த பொதுவில் 1/2 பங்கு போக மீதமுள்ள பொதுவில் 1/2 பங்கு சொத்தானது வாதிகளுக்கு சேரவேண்டியது என்றால் சரிதான். மேற்படி 1–ம் பிரதிவாதிக்கு பாகமாக வந்த 22.95 ஏக்கருக்கு 1–ம் பிரதிவாதி பெயரில் தான் பட்டா இருந்து வருகிறது என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதிக்கு பக்கவாதம் ஏற்பட்டு மூளை சரியில்லாமல் இருந்து வந்தார் என்றால் பக்கவாதம் ஏற்பட்டது உண்மை, மற்றபடி நன்றாக தான் இருந்தார். 1–ம் பிரதிவாதி பக்கவாதம் ஏற்பட்டு புத்தி சுவாதீனம் இல்லாமல் இருந்து வந்தார் என்றும், அதை பயன்படுத்தி நாங்கள் பி.வா.சா.ஆ.5

செட்டில்மெண்ட் ஆவணத்தை மோசடியாக எழுதி வாங்கிக்கொண்டோம் என்றால் சரியல்ல. அதனால் எங்கள் பெயரில் ஏற்பட்டுள்ள பி.வா.சா.ஆ.5 செட்டில்மெண்ட் ஆவணம் வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அதனால், வாதிகள் தாவாவில் கோரியபடி தாவா சொத்தில் வாதிகளுக்கு பாகம் கிடைக்கத்தக்கது என்றும், எங்களது பெயரில் ஏற்பட்டுள்ள செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR
Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.10.22 14:36:55 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**